திரு. சி. ஞானசேகரன் : ஸ்பீக்கர் சார், மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை.

திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. குமார தாஸ் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. அவரை நான் வெளியேற்றிவிட்டேன். எனவே அதுபற்றிப் பேச வேண்டாம். அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது, உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் வலியுறுத்த வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சிங்காரம் தன்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தாத காரணத்தால் பேரவையின் ஒப்புதலோடு அது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களின் காவேரி பாசன நெற்பயிர்களைப் பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடவேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கு. தங்கமுத்து, கு. சீனிவாசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் போன்ற பகுதிகள் காவேரி, கல்லணைக் கால்வாய் வடவாறு பாசனப் பகுதிகளில் மற்றும் வெண்ணாறு, வெட்டாறு போன்ற பாசனப் பகுதிகளில் நெல் தாளடிப்பயிர் தண்ணீர் தட்டுப்பாட்டால் காய்ந்துவிடும் நிலை உள்ளதால் அதற்கு ஒரு முறை தண்ணீர்ப் பாசனம் தரும் மேட்டூரிலிருந்து குறைந்த பட்சம் 10 தினங்களுக்காவது பாசனம் தரும் வகையில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து....

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ளதைப் படித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொல்லவேண்டும்.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களிலுள்ள காவேரி பாசனப் பகுதிகளிலுள்ள நெற் பயிர்களை பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடவேண்டியது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

அரசு ஆணை வாலாயம் எண் 690, பொதுப்பணித்துறை, நாள் 3—6—1992-ன்படி 28—1—1993 அன்று படுகைப் பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் காவிரிப் படுகை பாசனப் பகுதிகளில் உள்ள தாளடி நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கையின் அடிப்படையில் 7—2—1993—லிருந்து 7 நாட்களுக்கு, மேட்டூர் அணையிலிருந்து நாள் ஒன்றுக்கு 10,000 மில்லியன் கன அடி (கியூசக்ஸ்) வீதம் மொத்தம் 6.048 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடுவதற்கு அரசு ஆணை வாலாயம் எண் 124, நாள் ; 6—2—1993—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி.வி. இராஜேந்திரன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அங்கேயிருந்துகொண்டு பேசிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்த அடுத்த நாளே காவிரி நீர் பாசன பகுதி மக்களுடைய நிலையினை உணர்ந்து, தேவையினை உணர்ந்து இதய தெய்வம் டாக்டர்

[திரு. கு. தங்கமுத்து] [1993 பிப்ரவரி 10

புரட்சித் தலைவி அவர்களின் அரசானது (மேசையைத் தட்டும் ஒலி) தாளடி பயிர்களுக்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் நிலைமையை நாங்கள் கேட்காமலேயே உணர்ந்து திறந்து விட்டு காவிரி நீர் பாசனப் பகுதி மக்கள் பயன அடைகின்ற நிலைமையை உருவாக்கியதற்காக நான் தஞ்சை மாவட்டம், நாகை—காயிதே மில்லத் மாவட்டப் பகுதி மக்களின் சார்பாக வும், காவிரி பாசனப் பகுதி விவசாயிகளின் சார்பாகவும் முத லிலே நன்றியை இதய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்போல், இப்போது திறந்து விடப்பட்டிருக்கிற தண்ணீர் 7 தினங்களுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடை மடைப் பகுதிகளைப் பொறுத்தவரை இன்னும் குறைந்த பட்சம் 3 தினங்களுக்கு நீடித்துக் கொடுத்தால் எல்லா பகுதி மக்களுக் கும் பயப்படும் சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்தினால் அரசு இதையும் நிறைவேற்றித் தருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 2,54,213 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் உடனடியாக தஞ்சை மற்றும் நாகை—காயிதே மில்லத் மாவட்டங்களினுடைய விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு நடவடிக்கை எடுத்து இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஏழு நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப் படும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் போதவில்லை என்று சொன்னால் நெற்பயிர்களைக் காப்பாற்று வதற்கு தேவை என்று அரசு கருதுமானால் உறுப்பினர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை—காயிதே மில்லத் மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்களுடைய வேதனையை உணர்ந்த முதல்வராக இருக்கின்ற காரணத்தினாலே விவசாயப் பெருங் குடி மக்களுடைய குறையைத் தீர்க்கும் வகையிலே அந்தப் பகுதியிலே வாடுகின்ற பயிர்களுக்கு தண்ணீரை ஒரு வாரத்திற்குத் திறந்து விட உத்தரவிட்டு விவசாயப் பெருங்குடி மக்களு டைய வேதனையைத் தீர்த்திருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இங்கே ஒரு வார காலம் தண்ணீர் திறந்துவிடப்பட்டாலும் இன்னும் சட்ட மன்ற உறுப்பினர் திரு. தங்கமுத்து அவர்கள் கூறியதைப் போல, மூன்று நாட் களுக்குக் கூடுதலாக தண்ணீர் திறந்து விடவேண்டும். இல்லை யென்றால் தண்ணீரை அங்கே தடுக்கின்ற போது, மேலும் மூன்று நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கான அளவுக் குத் தண்ணீரை தேக்கி வைத்தாவது, அந்தத் தண்ணீரைக் திறந்து விட்டு பிறகு தண்ணீரை மூடவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன், 7 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று. ஏனென்றால் தண்ணீரை நாங்கள் கொடுக்கின்ற போது, தண்ணீர் வீணாகி விடக்கூடாது. இருக்கின்ற நிலங்களுக்கு விடப்படும் தண்ணீர் போதும் என்று அதிகாரிகள் தெரிவித்ததன் அடிப்படையிலே ஏழு நாட்களுக்குக் கொடுக்கிறோம். நான் ஏற்கனவே தெரிவித்ததுபோல, அந்தப் பயிர்களைக் காப்பாற்ற மேலும் மூன்று நாட்களுக்கு வேண்டுமென்று சொன்னால், அது கல்லணையிலே தேக்கி வைக்கிறோமா அல்லது நேரடியாக தருகிறோமா என்பது பிரச்சினையல்ல. அங்கு தண்ணீர் போக வில்லை என்ற நிலைமை இருக்குமானால் உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பயிர்களைக் காப்பாற்றுவதற்கு மேலும் 3 நாட்களுக்கு நீட்டித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992--93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்

முற்பகல் 11.15

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1990-91) அளித்த ஐம்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தி மூன்றாவது அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (1991-92) அளித்த பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய எண்பத்தி நான்காவது அறிக்கை.